ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

क्षीरांभोनिधिमन्थनोद्भवमहाहालाहलं भीकरं
दृष्ट्वा तत्र पलायितान् सुरगणान् पद्मोद्भवादींस्तदा ।
यः पीत्वा तदपालयत् जगदिदं विश्वाधिकं शङ्करं
सेवध्वं सकलापदः परिहरेत् कैलासवासी विभुः ॥ शिवस्तोत्रे ।

முன் ஒருஸமயம் விண்ணவர்களும், தானவர்களும், அமுதம் உண்ண விருப்பம் கொண்டு பாற்கடலை கடையுங்கால் அதிலிருந்தும் உண்டானதாயும் மிகவும் பயங்கரமாயுமிருக்கும் விஷத்தைப்பார்த்து பயந்துஓடுகிறவர்களான அந்த தேவக் கூட்டங்களையும், மற்றுமுள்ள ஸகல ஜகத்தையும், எந்தப் பிரபுவானவர் அக்கொடிய விஷத்தைப்புசித்துப்பாது காத்தாரோ அவ்வித மஹிமை வாய்ந்தவரும், ஸமஸ்த தேவர்களுக்கு அதிபதியாயும், கைலாஸ வாஸியுமான ஸ்ரீ சங்கரரை ஸேவியுங்கள். எவ்விதமான ஆபத்தையும் அந்த பிரபு உடனே விலக்கிவிடுவர்.

நாம் கஷ்டங்களை அனுபவிக்காமல் எப்பொழுதும் சுகித்திருக்க வேண்டுமென்கிற ஆவல் யாவருக்கும் இயற்கையிலிருக்கக் கூடியதே. அவ்விதம் சுகத்தைப் பெறுவதற்கு ஸ்ரீகைலாஸாதிபதியான பரமேசுவரனை ஆராதனம் செய்வதே முக்கிய ஸாதனமாகும். நமது கஷ்டங்களைப் போக்கி, சுகத்தை அளிக்கும் சக்தி அவருக்குண்டா எனச் சங்கிக்க இடமில்லை, ஏனென்றால் திருப்பாற் கடலிலிருந்தும் உண்டானதும், மூவுலகங்களையும் க்ஷணகாலத்தில் தஹிக்கும் சக்திபெற்றதும், விண்ணவர்களையும் பயந்து ஓடும்படி செய்ததும், மிகவும் பயங்கரமான காளகூடமென்னும் கொடிய விஷத்தைச் சிறந்த நாகைக் கனியைப்போல் உடனே அருந்தி சகல லோகங்களையும் ரக்ஷித்த பிரபுவிற்கு நம் போன்றவர்களுடைய கஷ்டத்தை விலக்குவது வெகு சுலபமென்று ஸ்பஷ்டமாய் தெரியவில்லையா ; ஆகையால் அந்த ஈசனை ஆராதித்து யாவரும் சுகமாயிருக்க வேண்டுமென்று ஒரு பெரியார் அறிவிக்கிறார்.

உப பத்திராதிபர்

# ஆர்ய தர்மம்.

க்ஷய வருஷ மார்கழி-மீ ௧௫௨


## ஸ்ரீ பரமேசுவர ஸேவை முக்கியம்.

(578-வது பக்கத்தொடர்ச்சி)

துர்மதி:— வழிநடுவில் மிகவும் ஸந்தோஷத்துடன் தன்மித்ரனை நோக்கி ஹே சிறந்த நண்பனே, நாஸ்திகனான என்னுடைய அதிர்ஷ்டத்தை இதோ பார் என்று தன்னால் அடையப்பட்ட ரூபாய் ஒன்றை அவனிடம் காண்பித்து பகவானை நான் அப்பிரதக்ஷிணமாகப் பிரதக்ஷிணம் செய்துவிட்டு வந்தபடியால் மார்க்கத்தில் பூமியிலிருந்து எனக்கு ஒரு ரூபாய் கிடைத்தது என்றான்.

ஸுமதி:— வருத்தத்துடன்கூட ஹே வயஸ்ய ! பக்தியினாலே பகவானைப் பிரதக்ஷிணம்செய்து பிரார்த்தித்துக்கொண்டு திரும்பிவருகிறவனாயும் சிறந்த ஆஸ்திகனாயும் இருக்கும் என்னுடைய காலில் கல் இடறி புண் ஏற்பட்டுவிட்டது. என்செய்வேன் என்றான்.

துர்மதி:— மிகவும் உத்ஸாகங்கொண்டு, ஸகே! ஈசுவரபக்திக்கு உசிதமான பலம் உன்னால் அடையப்பட்டது. ஆகையால் நான் உனக்கு உபதேசிக்கிறேன். கவனமாய்க் கேள். தெய்வபக்தியானது கஷ்டத்தை உண்டுபண்ணும். நாஸ்திக்புத்தியானது சிரேயஸ்ஸை உண்டுபண்ணும் என்றறிவித்து இங்கு சொல்லப்பட்டதில் நாஸ்திக்யவிஷயத்தில் ரூபாய் ஒன்று என்னால் எதிர்பாராமல் அடையப்பட்டிருக்கிறபடியால் நானே உதாரணமாக ஆகிறேன் என்றும் கூறினான்.

ஸுமதி:— நாஸ்திகர்களுக்குள் சிறந்தவனே! என்னையும் கெட்டபுத்தியுடையவனாகச் செய்ய இச்சிக்கிறாயா ? நீ சொல்வது

சரியல்ல. எனக்கு முந்தியே ஒரு ஜோஸியர் உன்னல் முற்பிறவியில் செய்யப்பட்ட மிகவும் கொடூரமான பாபத்தினுல் அபமிருத்யுவால் இப்பொழுது நீ பீடிக்கப்படுவாய் என்று சொன்ன விஷயத்தை நான் அறிந்துகொண்டிருக்கிறேன். ஆகையால் அவ்வித அபமிருத்யு நேராமல் இருக்கவேண்டியே தேவாலயம் சென்று பல வேதங்களாலும் போற்றக்கூடிய பெருமைவாய்ந்த ஸ்ரீமங்களாம்பிகையின் பதியான ஸ்ரீபரமேச்வரனை மிகவும் பக்தியுடன் அடிவணங்கிப் பிரதக்ஷிணம் செய்து ஸன்னிதியில் வந்து கைகூப்பிநின்றுகொண்டு மார்க்கண்டேயமுனிவருக்குப்போல் உமதுகருணையால் என்னுடைய மிருத்யுவுக்கு நாசம்ஏற்படவேண்டும் என்று பிரார்த்தித்தேன். அவ்விதம் பிரார்த்தித்தபடியால்தான் பகவத் கருணை ஏற்பட்டு என்னிடம் வர சித்தமாயிருந்த மிருத்யுவானவன் என்னை ஒன்றும் செய்யமுடியாமல் சிலையினுடைய அடியால் அற்ப துக்கத்தை உண்டுபண்ணித் திரும்பிவிட்டான். ஹே மூர்க்க! இதனுல் பகவானுடைய அனுக்ரஹத்தால் அபமிருத்யுகூட நம்மைவிட்டுத் தூரத்தில் விலகிவிடுகிறுன் என்பதை நீயும் தெரிந்துகொள். ஆகையால் பகவானுடைய அனுக்ரஹத்தைப் பெறுவதற்காக ஆஸ்திகபுத்தியுடன் திடமான ஈசுவரபத்தி அவசியம் சம்பாதிக்கவேண்டும்.

நீ முன் ஜன்மத்தில் செய்த புண்ணியத்தால் இந்த ஜன்மாவில் அதிகமான திரவியத்தை அடையவேண்டியவன், பகவானிடத்தில் த்வேஷபுத்தியை வைத்துக்கொண்டிருப்பதால் அப்பொருள் உனக்குக்கிட்டாமற்போய் அதையடையவேண்டிய பாக்கியம் உனக்கிருக்கிறது என்பதையறிவிக்கவேண்டி ஒருரூபாய் மாத்திரம் உன்னல் அடையப்பட்டது என்று கூறினன்.

துர்மதி:—தன் நண்பன் கூறியதைப் பூரூவும் நன்கு ஆலோசித்து மிகவும் ஸந்தோஷத்துடன், "ஹே ஸகே! ஆஸ்திக்ய புத்தியை அடைந்தவர்களுக்கு இருக்கும் மகிமை நன்கு அறியப்பட்டது. இதற்குமேல் எனக்கு அதிகம் உபதேசிக்கவேண்டியதில்லை. இதுமுதற்கொண்டு நானும் உன்னைப்போல் சாஸ்

திரங்களால் போதிக்கப்பட்ட நல்வழிகளில் இருந்துகொண்டு தம் பக்தர்கள் எதை விரும்பியபோதிலும் அன்புடன் அளிக்கும் சக்திவாய்ந்தவரும் கருணைக்கடலாயும் பரஞ்ஜோதியாயும் விளங்கும் பகவானான ஸ்ரீ ஆதிகும்பேசுவாருடைய கருணையைப் பெறுவதற்கு முயலுகிறேன். இது நிச்சயம்" என்று கூறியதைச்செவியுற்ற அவன் மித்ரனான ஸுமதியும் அதிக ஆனந்தங்கொண்டு ஸ்நேகிதனுடன் கிருஹம் சென்றான்.

இதனால் பகவதாராதனத்தால் எவ்விதத் தீமையும் விலகி நன்மை ஏற்படும் என்றும் பகவானிடத்தில் பக்திசெய்யாவிடில் விசேஷமான பொருள் நஷ்டமும் சரீரசிரமமும் அதிக பாபமும் ஏற்படுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

ஆகையால் ஸகல ஜனங்களும் தம் தம் சக்திக்கியன்றவரையில் பகவத்பக்தியில் ஈடுபட்டு அவருடைய அனுக்ரஹத்தைப் பெற்றுப் பிறவிப்பயனை அடையவேண்டுமென்பதை ஒருகாலும் மறக்கக்கூடாது. சுபம்.

உபபத்திராதிபர்.

---

# ஆர்யதர்மாபிவர்த்தினி ஸபா, கீழையூர் திருக்கோவிலூர்.

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சி காமகோடி மடம் ஆஸ்தான பண்டிதர் பாஷ்யபாவக்ஞ ஸ்மிருதிபூஷண பிரம்மஸ்ரீ வெங்கடராமசாஸ்திரிகள் 12—12—26 ஆதிவாரம் மாலை பாலக்காட்டிலிருந்து ஸ்ரீமடத்திற்குத் திரும்பிப்போகும்வழியில் எதிர்பாராது இங்கு விஜயம் செய்யநேர்ந்தது.

यथाऽमृतस्यसंप्राप्तिः यथा वर्षमनूदके ।

என்ற ரீதியாய் இப்பெரியாரின் விஜயம் இப் பிரதேசத்தாற்கிருந்தது. அன்றிரவு 8-மணிக்கு இவ்வூர் ஞானியார் மடத்தில் இச்சபை கூடிற்று. பல பிரமுகர்களும் மற்றோரும் குழுமியிருந்த

னர். "தன்னைத்தானுணர்தல்" என்பதைப்பற்றி பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் அவர்கள் இனியதோர் மஹோபந்யாஸம் செய்தார்கள். நம் ஸ்வரூபத்தை மறைத்து நம்மை ஓயாத்தொல்லையிலாழ்த்திக் கொண்டுள்ள ராகத்வேஷாதிகளை பிரதிவாதிக்கக்ஷியாகவும், நம் ஸ்வரூபத்தை உணர்த்தும் வகையில் உதவிபுரியும் வைராக்யாதி ஸத்குணங்களை வாதிக்கக்ஷியாகவும் இவ்விருகக்ஷிகளும் முறையே விப்ரமன், விவேகன் இவர்களை வக்கீல்களாகக்கொண்டு ஸர்வேச்வரன் ஸந்நிதியாகிற நீதிமன்றத்தில் வழக்காடி தேவதைகளுங்கூட ஸ்வப்ரயோஜனத்தைக்கருதி விப்ரமன் கக்ஷிக்கனுகூலமாகவே சாக்ஷிசொல்ல, உண்மைக்கடைப்பிடித்து வைராக்யாதி ஸத்குணங்களைத் தன் கக்ஷியாகக் கொண்ட விவேகன் ஸத்குரு கடாக்ஷவிசேஷத்தாலும், ஸர்வேச்வரனுடைய ப்ரஸாதத்தினாலும் எதிர்க்கக்ஷியை முற்றும் வென்று தனக்குற்றதாயும் அவித்யாவாஸனையினால் நழுவிப்போனதாயுமுள்ள ஸ்வஸ்தானத்தை ஆத்மாவுக்கு மீண்டும் கிடைக்கச்செய்து துக்கமிசிரமில்லாத நித்யானந்தத்தில் நிலைக்கச்செய்கிறான் என்று சிரவணானந்தமாய் பிரஹதாரண்யகோபநிஷத்தை ஆதாரமாய்க்கொண்டு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்

13—12—26 ஸோமவாரம் இரவு 8-மணிக்கு இச்சபை கூடிற்று. அன்று மேற்கண்ட பெரியார் "சிரார்த்தம்" என்பதைப்பற்றி செய்த இனிய உபந்யாஸத்தின் சுருக்கம் பின்வருமாறு—இறந்தவர்க்கு அவர் ஸந்ததிகளால் உள்ளன்புடனும் உத்தம் சிரத்தையுடனும் வேதவிதிப்படி கொடுக்கப்படும் பொருள் சிராத்தம் எனப்படும். இறந்தவர்க்கு அவரவர்கள் கர்மவாஸனைகளுக்கேற்ப ஏற்படும் இடங்கள், பூலோகம், அந்தரிக்ஷம், ஸ்வர்க்கம், பிரம்மலோகம், நரகம், வஸுருத்ராதித்யாள் என்ற தேவ விசேஷங்கள் இறந்தவர்களின்பொருட்டு இங்கு அவர் ஸந்ததியாரால் கொடுக்கப்படும் திரவியங்களின் ஸாரத்தை க்ரஹித்து அவர்களின் இருப்பிடங்களையறிந்து அவரவர்க்குபயோகப்படும் விதமாய்ச் சேர்ப்பிக்கிறார்கள். தேகவியோகமானவர் ஒருவேளை மோக்ஷமடைந்திருப்பின் அவர்பொருட்டுக் கொடுக்கப்படும் பொருள், பசு, ப்ரஜா

முதலிய ஸம்பத்ஸ்வரூபமாய் கொடுத்தவர்க்கே மீண்டும் கிடைத்துவிடும்படி செய்யப்படுகிறது. பிராம்மணனுடைய தேஹம் தேவதைகளுக்கு இவ்வுலகத்தார் கொடுப்பதை ஏற்று அனுக்ரஹித்துச்செல்ல, உற்றவழிநிலை (தங்குமிடம்)யாக இருப்பதால், ஆசாரநியமம் கர்மானுஷ்டானம் முதலியவைகளினுல் தன் தேகத்தையும் மனதையும் பரிசுத்தமாய் வைத்துள்ள பிராம்மணனே சிராத்தத்தில் வரிக்கப்பட அர்ஹனுகிருன். சிராத்தத்திற்கு முன் நாள் மாலை, அந்த தினத்தன்று காலை, சிராத்தம் துவக்கும் ஸமயம் ஆக மும்முறை பிராம்மணன் பேரன்புடன் வரிக்கப்படவேண்டும். வரிக்கப்பட்ட நிமிஷம்முதலே அந்தப்பிராம்மணனிடம் தேவதைகள் முகாம் செய்கின்றனர். கோத்ரம், ஸூத்ரம், கர்மா முதலிய விவரங்களைச்சொல்லி அக்நி, பிராம்மணன், பிண்டப்ரதானம் இவற்றின்மூலமாய் விதிப்படி கொடுக்கப்படும்திரவ்யங்களின் ஸாரத்தை வஸுருத்ராதித்ய தேவதாவிசேஷங்கள் கொண்டு போய்த்தவருது சேர்ப்பிக்கின்றனர். இது ஸர்வேச்வரனுல் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு. இங்கு திரவியம் கொடுக்கப்படுவதும், மற்றைய உலகங்களில் அது பட்வாடா ஆகும் முறைகளை தபால் இலாகாவில் நிகழும் முறைகளை உதாஹரித்து கேட்போர் மனதில் பசுமரத்தாணிபோல் பதியுமாறு இப்பெரியார் சொன்னுர்கள்.

ஸ்வர்க்கத்தில் கல்பவிருக்ஷம், காமதேனு, சிந்தாமணி முதலிய அரியபொருள்கள் இருப்பினும் அவரவர்கள் நல்வினைக்குத் தக்கபடியும் இங்கிருந்து கொடுக்கப்படும் திரவியத்திற்கு தக்கபடியுமேதான். அங்கிருப்பவர்க்கு அவற்ருல் சுகம் கிடைக்கிறதேயன்றி மேற்கண்ட கல்பவிருக்ஷம் முதலியவை தாமே ஒன்றும் கொடுப்பதில்லை. ஆகவே தேகவியோகமானவர்களுக்குப் பேருதவியாகவும்கொடுப்பவர்க்கு பரமஸ்ரேயஸ்ஸைத்தருவதாயுமுள்ள இந்த சிராத்தகர்மாவைத் தவருது விதிப்படி பரமசிரத்தையுடன் செய்வது மிக முக்யமான கடமையாகும்.

15—12—26 மங்களவாரம் இரவு 8-மணிக்கு இச்சபை கூடிற்று. "லோகாந்தரநிலை" என்ற விஷயம் பிரம்மஸ்ரீ சாஸ்திரி

களவர்களால் உபந்யஸிக்கப்பட்டது. இதன் சுருக்கம் பின்வருமாறு;— இதையே "மார்க்த்ரயநிரூபணம்" என சாந்தோக்ய ப்ரஹதாரண்ய உபநிஷத்துக்கள் விவரித்துச் சொல்கின்றன. உடல்நீத்தார் செல்வதற் கேற்பட்டுள்ள மார்க்கங்கள் மூன்று. சாஸ்த்ரத்தின் விதிவிலக்குகளின் வரம்புகடவாது நின்று தத்தமக் கேற்ற முறையில் ஆண்டவனை அன்புபெருகி வழிபட்டு இவ்வுலகில் வாழ்ந்தவர்க்கு இவ்வுலகிலிருந்து 14-வது படியிலுள்ள பிரம்மலோகவாஸம் கிடைக்கிறது. அங்கு "ஆனந்தபாக்" என்ற இன்பநிலையத்தில் பிரம்மதேவரால் உவகையுடன் வரவேற்கப்பட்டு, நித்யஸூரிகளாய் நீடூழி வேதாந்தவிசாரம் செய்துகொண்டிருந்து பின்னர் பிறவிப்பிணிகடந்த மோக்ஷானந்தமெய்துகின்றனர். இவ்வாறு செல்பவர் ஒவ்வோர் படியிலும் ஆங்காங்குள்ள தேவதா விசேஷங்களால் விசேஷ மரியாதையுடன் உபசரிக்கப்படுகின்றனர். இவ்வுபசரணைகளை ஏற்றனுபவிக்கும்பொருட்டு ஆங்காங்கு தக்கபடி தேகங்கள் கிடைக்கின்றன. வழியில்காணப்படும் அத்யாஸ்சரியமான போகவிசேஷங்களைச் செல்பவர்கள் ஒருவேளை இச்சித்தால் அங்கேயே இவர்கள் அவைகளை அனுபவித்தற்பொருட்டு விட்டுவிடப்படுகின்றனர். இந்த போகங்களை நெடுங்காலமனுபவித்தபின்னர் மீண்டும் இவ்வுலகத்தில் பிறக்க நேரிட்டுவிடுகிறது. இதுவே முதலாவது மார்க்கம்.

ஆண்டவன் வழிபாடின்றிவேதசாஸ்திரவிதிப்படிகர்மாக்களை பலாபேக்ஷையோடு செய்து இவ்வுலகில் வாழ்ந்தவர்க்கு ஸ்வர்க்கம் செல்லும்பொருட்டு ஏற்பட்டுள்ளது இரண்டாவது மார்க்கம். ஸ்வர்க்கம் இங்கிருந்து 9-வது படியிலிருக்கிறது. ஸ்வர்க்கம் செல்பவர் அங்கு தத்தம் கர்மானுகுணமான போகங்களையனுவித்து மீண்டும் இவ்வுலகத்திற்குத் திரும்புகின்றனர்.

(தொடரும்)

K. R. சுப்பிரமணியசாஸ்திரி,

காரியதரிசி.

---

# மஹோதய புண்ணியகால நிர்ணயம்.

இந்த புண்ணியகாலவிஷயமாய் மதுராவாஸியான கிருஷ்ணபுரம் சிவஸ்வாமிதீக்ஷிதரவர்கள் எழுதியிருப்பதற்கு விரிவாய் அடுத்த ஸஞ்சிகையில் நிர்ணயம் கூறுவதாக முன் ஸஞ்சிகையில் கூறினோம். அதை இங்கு விவரிப்பாம். இந்த விஷயத்தில் ஷை தீக்ஷிதரவர்களுக்கு இரண்டு பிரதிக்ஞை. அதாவது— திங்கட்கிழமையில் அமாவாஸயாதிகள் சேர்ந்தால் மஹோதய புண்ணியகாலமென்று பஞ்சாங்கங்களில் எழுதியிருப்பதைத் தவிர வேறு மூலப்பிரமாணவசனம் கிடைக்கவில்லை. அது கிடைக்கும் வரை அதை அனுஷ்டித்துவரும் அந்த பரம்பரையான வழக்கத்தை விட வேண்டுமென்பது முதலாவது. புதன்கிழமையில் அமாதிகள் சேரும் போதுதான் மஹோதயபுண்ணியகாலம். அதற்குத்தான் ஸ்மிருதிகளில் காணப்படும் வசனங்கள் பிரமாணமாகின்றன. அதனால் புதன்கிழமையிற்றான் மஹோதயபுண்ணியகாலம். அது இவ்வருஷம் தைமாதத்தில் நேருவதால் அன்று ஸ்நானதான சிராத்தாதிகளை அனுஷ்டிக்கவேண்டுமென்பது இரண்டாவது. இவ்வளவு காலமாய் நடந்துவந்த சிஷ்டாசாரம், தீக்ஷிதரவர்கள் பிரதிக்ஞைப்படி இல்லாமல் விபரீதமாய்க்காணப்படுகின்றதேயென்றால், இவ்விஷயத்தில் சிஷ்டாசாரப் பிரம்மாஸ்திரப்பிரயோகம் செய்யக்கூடாதாம். இங்கு சற்று கவனிக்கவேண்டும்.

சிஷ்டாசாரம் எவ்விஷயத்திலும் பிரமாணமாகாதென்று நமது தீக்ஷிதரவர்கள் நினைக்கின்றார்களா? அல்லது பிரகிருதவிஷயத்தில் அது பிரமாணமில்லையென்று நினைக்கின்றார்களா? சிஷ்டாசாரம் எவ்விஷயத்திலும் பிரமாணமாகாதென்று நினைப்பதானால் சிஷ்டாசாரமே பிரமாணமில்லையென்று நினைத்ததாக ஆகும். இப்படியானால் கர்மங்களிலும் ஆசாரங்களிலும் ஸந்தேகப்பட்ட விஷயத்தில் சிஷ்டாசாரத்தையே பிரமாணமாகக்காட்டும் சுருதியும் சிஷ்டாசாரத்திற்குப் பிராமாண்யத்தை வ்யவஸ்தாபனம் செய்யும் பூர்வமீமாம்ஸாதிகரணமும் விரோதிக்கும். "**आचारश्चैव साधूनां**" என்பதாதி சிஷ்டாசாரத்தை தர்மத்தில் பிரமாணமாகக் குறிக்கும் மன்வாதி வசனங்களும் கோபிக்கும். அனேகவிஷயங்களில் "**यथाशिष्टाचारं व्यवस्था**" என்பதாக வைத்தியநாததீக்ஷிதர்வர்கள் முதலிய நிபந்தனக்காரர்கள் சிஷ்டாசாரத்தையே முக்கியப்பிரமாணமாகக்கொண்டு வியவஸ்தை செய்துகொள்ளுமாறு நிச்சயித்திருப்பது வீணாய்விடும். பிரஸவித்த பத்தாவது தினத்தில் பிறந்த சிசுவுக்கும், அதன் தாய்தந்தையர்களான தம்பதிகளுக்கும் க்ஷௌரத்தை விதிக்கும் பிரத்தியக்ஷ மூலஸ்மிருதிவசனத்தை சிஷ்டாசாரப் பிரம்மாஸ்திரத்தாற்றானே நிபந்தனக்காரர்கள் மறுத்திருக்கின்றார்கள். மைத்துனன் மரணத்

தில் ஒருநாள் தீட்டை விதிக்கும் வசனத்தை அனுக்ஷ்டானத்திற்குக் காரணமாகாமல் விரட்டினது இந்த ஆசாரப்பிரம்மாஸ்திரந்தானே. இம்மாதிரி பல்கோடி விஷயங்கள் சிஷ்டாசாரத்தாலேயே வியவஸ்தை செய்யப்பட்டிருக்கின்றனவென்பது ஸ்மிருதிகளையும் நிபந்தனங்களையும் ஆராய்ந்திருப்பவர்களுக்குத் தெரியாத விஷயமில்லை. ஆகவே சிஷ்டாசாரம் எவ்விஷயத்திலும் பிரமாணமாகாதென்று நினைப்பது ஸரியல்ல. சிற்சில விஷயங்களில் சிஷ்டாசாரம் பிரமாணமாயினும், பிரகிருத மஹோதயபுண்ணியகால விஷயத்தில் பிரமாணமாகாது என்று நினைப்பதும் ஸரியல்ல. அனேக விஷயஙகளில் பிரமாணமாயிருந்த சிஷ்டாசாரம் பிரகிருத விஷயத்தில் பிரமாணமாகாமற்போனது எதனாலோ தெரியவில்லை. இக்காலத்தில் சிஷ்டாசாரத்தைப் பிரமாணமாகக்கொள்ளாவிடில் எல்லா ஸ்மிருதிகளையும் நிபந்தனங்களையும் பார்க்கச் சக்தியற்றவர்களுக்குத் தர்மானுஷ்டான விஷயத்தில் வேறு சரணம் எது ?

எல்லாஸ்மிருதிகளையும் நிபந்தனங்களையும் ஒன்றுவிடாமல் பார்த்துவிட்டதாக எவராலேனும் பிரதிக்ஞை செய்யமுடியுமா? அப்படி நமது தீக்ஷிதரவர்கள்தான் துணிந்து பிரதிக்ஞை செய்வார்களா? அப்படியிருக்க அனுதிசிஷ்டபரம்பராப்பிராப்தமான திங்கட்கிழமையோடுகூடின அமாதியோகத்திற்றான் மஹோதயபுண்ணியகாலத்தை அனுஷ்டித்துவந்தசிஷ்டர்களின்ஆசாரத்தைப்பிரகிருதவிஷயத்தில்நமதுதீக்ஷிதரவர்கள்பிரமாணமாக நினைக்காதது சரியல்ல. இதை அந்த பாம்பரையென்றும், இதனால் பஞ்சாங்கம் போட்டவர்களும் மோஹித்துவிட்டதாகவும் நமது தீக்ஷிதரவர்கள் துணிந்து சொல்லிவிட்டார்கள். அது எந்தப் பிரமாணபலத்தாலோ தெரியவில்லை. அவர்கள் எழுதியுள்ள 2, 3-வசன பலத்தாற்றான் என்றால் அது பொருந்தாது. இதற்கு முன் ஸஞ்சிகையில் வைதிகதர்மாபிமானி என்ற ஒருவரால் வரையப்பட்டதில் தீக்ஷிதரவர்கள் காட்டிய வசனங்கள் அவர்கள் கக்ஷியைத்தான் ஸ்திரப்படுத்துமென்று நம்பமுடியவில்லை. நமது தீக்ஷிதரவர்கள் திங்கட்கிழமையில் மஹோதயபுண்ணியகாலமுண்டென்பதற்கு மூலஸ்மிருத்யாதி பிரத்யக்ஷவசனம் பிரமாணமாகக்காட்டவேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு நமது தீக்ஷிதரவர்கள் காட்டிய வசனங்களையே வைதிகதர்மாபிமானியென்றவர்கூறிய வியாக்யானப்படி பிரமாணமாகக்கொள்ளலாம். ஆனால் அந்த வியாக்யானம் தீக்ஷிதரவர்களது ஸொந்தவியாக்யானத்திற்கு முறண்படுமேயெனின் அப்பொழுது தீக்ஷிதரவர்கள் வியாக்யானம் ஸரியா? அல்லது தர்மாபிமானியின் வ்யாக்யானம் ஸரியா ? என்று விசாரம் செய்யவேண்டும். தீக்ஷிதரவர்கள் வியாக்யானத்தில் முதலாவது பிரமாணமாகக்காட்டிய பாரத வசனத்திலுள்ள "सौम्यवारेण योगोयं" என்றவிடத்தில் ஸௌம்ய என்ற பதத்திற்கு புதன் என்று அர்த்தம் கூறப்படுகின்றது. அப்பொழுது அந்த ஸௌம்யபதம் அடுத்த "வார" என்ற பதத்தோடு ஸாமானாதிகரண்

யத்தால் ஸமாஸத்தையடையாது. வ்யதிகரணமாகத்தான் அதாவது ஷஷ்டீதத்புருஷமாகத்தான் ஸமாஸத்தை அடையவேண்டும். அதுதீக்ஷிதரவர்களால் உதாகரிக்கப்பட்ட ஸங்கிரகவசனத்திற்கு விரோதிக்கின்றது. ஸங்கிரகவசனத்திலோவெனில் सौम्ये वारे என்று ஸாமாநாதிகரண்யம் கூறப்படுகின்றது. அந்த ஸாமாநாதிகரண்யம் பாரதத்திலும் ஸம்பவிக்கும்போது அதை விட்டு வையதிகரண்யத்தை ஆசிரயிக்க நியாயமில்லை. ஸாமாநாதிகரண்யம் ஸம்பவிக்குமிடத்து வையதிகரண்யத்தை ஆசிரயிக்கக் கூடாதென்று பூர்வதந்திரத்தில் நிஷாதஸ்பத்தியதிகரணத்தில் கூறப்படுகின்றது. அதாவது "நிஷாதஸ்பத்திக்கு இந்த யாகத்தைச் செய்துவைக்கவேண்டும்" என்ற பொருளை விளக்கும் ஓர் ச்ருதிவாக்கியத்தில் நிஷாதஸ்தபதி என்ற பதம் நிஷாதர்களுக்கு ஸ்தபதி என்று ஷஷ்டீதத்புருஷ ஸமாஸத்தை ஆசிரயித்து பிராமணாதி மூவருணத்தவருள் யாரேனுமொருவரைக் கூறுகின்றதா அல்லது நிஷாதனாய் இருக்கும் ஸ்தபதி என்று கர்மதாரயஸமாஸத்தை ஆசிரயித்து நிஷாதஜாதியோனைக் கூறுகின்றதாவென்று ஸந்தேகம் நிகழ, ஷஷ்டீஸமாஸத்தை ஆசிரயித்து த்ரைவர்ணிகருள் ஒருவரைக்கூறுகின்றதென்று சில யுக்திகளைக் கொண்டு பூர்வபக்ஷம் பிராப்தமாகவே அது கூடாது. அப்பொழுது லக்ஷணை கற்பிக்கவேண்டியதாகின்றது. அதனால் அபேதஸமாஸத்தை ஆசிரயித்து நிஷாதனாய் இருக்கிற ஸ்தபதியாகிய நிஷாதஜாதியோனையே கூறுகின்றதென்று ஸித்தாந்தம் கூறப்படுகின்றது. அந்த அதிகரண ஸித்தாந்தப்படிக்கும் "ஸௌம்யே வாரே" என்றதையும் அனுஸரித்து ஸௌம்யவாரேண என்ற பாரத வசனத்திலும் ஸௌம்யமாய் இருக்கிற வாரமென்றுதான் பொருள்கொள்ளவேண்டுமேயன்றி ஸௌம்யனுடைய வாரமென்று பொருள்கொள்ளல் கூடாது. ஸௌம்யமாய் இருக்கிற வாரமென்றால் புதன்கிழமையென்று பொருள் கிடைக்காது. அன்றியும் ஸௌம்யே வாரே என்ற ஸங்கிரஹ வசனத்தில் ஸௌம்ய என்ற பதத்திற்கு புதன் என்று அர்த்தம் செய்துவிட்டால் புதனாய் இருக்கிற வாரம் என்று ஏற்படும். அது பொருத்தமுடையதன்று. புதன் என்பவர் வாரத்திற்கு அதிபதியேயொழிய அவரே வாரமாகமாட்டார். அவருடையதாக வாரம் ஆகும். ஸௌம்யனுடைய வாரமென்று பொருள்கொடுப்பதற்குள்ள சப்தம் ஸௌம்யே வாரே என்றவிடத்திலில்லை. அங்கு ஸௌம்யே என்றபதத்திற்கே ஸௌம்யனுடையது என்று அர்த்தம் சொல்லிவிடுவோமே என்றுகூறமுடியாது. அந்த அர்த்தம் ஒவ்வொரு சப்தங்களுக்கும் அந்தந்த அர்த்தங்களில்சக்தியை அறிவிக்கும் பிரமாணமாகிய வ்யாகரணம் கோசம் முதலியவைகளாலேற்பட்டதா? அல்லது வேறு பிரமாணத்தாலா? வ்யாகரணத்தாலென்றால் அது எவ்விதமென்று கவனிக்கவேண்டும். ஸௌம்ய என்ற பதம் सोमाट्ट्यण् என்ற வியாகரண ஸூத்திரத்தாலேற்பட்டது. அதுஸோமனை தேவதையாக உடையது என்றுள்ள அர்த்தத்தில் பிரகரணத்தை யொட்டிவருமேயன்றி

புதன் என்ற அர்த்தத்தில்வராது. ஸௌம்ய என்ற பதத்தை புதன் என்ற அர்த்தத்தை உடையதாகக்கூறாத வ்யாகரணம் புதனுடையது என்று அர்த்தம் உடையதாகவா கூறப்போகிறது? ஆகவே ஸௌம்யபதம் புதனுடையது என்ற அர்த்தத்தில் சக்தியுள்ளது என்பதற்கு வ்யாகரணம் பிரமாணமாகாது रौहिणेयो बुधस्सौम्यः என்ற கோசத்தாலென்றால் அது ஸௌம்யபதம் புதன் என்ற அர்த்தத்தில்சக்தி உள்ளது என்பதற்கும் பிரமாணமேயன்றி புதனுடையது என்ற அர்த்தத்தில் சக்தி உள்ளது என்பதற்குப் பிரமாணமாகாது. லக்ஷணையால் அந்த அர்த்தம் ஏற்படுகிறதென்றால் என் லக்ஷணைகற்பிக்கவேண்டும் சக்தியார்த்தமென்ற வாச்சியார்த்தம் ஸம்பவிக்காதவிடத்திலல்லவா லக்ஷணைகற்பிப்பது நியாயம். இங்கு வாச்சியார்த்தம் ஸம்பவிக்கும்பொழுது லக்ஷணைகற்பிப்பது தோஷமாகும். ஸௌம்யபதத்திற்கு வாச்சியார்த்தமோ ஸோமனை தேவதையாகவுடையது என்றுதான் ஏற்படுகிறது. அப்பொழுது ஸௌம்யவாரமென்றால் ஸோமனை தேவதையாகவுடைய வாரம் அதாவது திங்கட்கிழமையென்று அர்த்தமாகுமேயொழிய *புதனுடையதானவாரம் அதாவது புதன் கிழமை என்று அர்த்தமாகாது. வேறு பிரமாணத்தாலென்பதும் அப்பிரமாணம் பிரஸித்தமாய் இல்லாததாற் கூறமுடியாது. வாராதிபதியை போதிக்கும் சப்தம் வாரத்தைக் குறிப்பதாக ஸ்மிருதிகளில் பிரயோகம் செய்திருந்தால் ஆங்கு அதைஉதாகரிக்கும் நிபந்தனக்காரர்கள் வியாக்யானம் செய்வார்கள்.

உதாரணமாக இதே பாரதவசனத்தில் "அமார்க்கபாதச்ரவண" வென்றவிடத்தில் அர்க்க என்ற பதம் ஞாயிற்றுக்கிழமைக்கதிபதியாகிய சூர்யனை சக்தியால் போதிப்பிக்கும். அது இங்கு பொருந்தாதென்றெண்ணித்தான் வைத்யனாததீக்ஷிதரவர்கள் अर्कः भानुवारः என்று வ்யாக்கியானம் செய்து காட்டினர். இதை நமது தீக்ஷிதரவர்களும் எழுதி இருப்பதால் அறிந்திருக்கலாம். அதுபோலவே ஸௌம்ய என்ற பதமும் சம்சயப்படக்கூடியதாய் இருந்தால் அதற்கு வைத்யனாததீக்ஷிதரவர்கள் வ்யாக்கியானம் செய்திருப்பார்கள். வ்யாகரணத்தாலேயே ஸௌம்யபதம் ஸோமனை தேவதையாக உடையது என்ற அர்த்தத்தில் கூறப்பட்டு பிரஸித்தமாய் இருப்பதால்தான் முன் வாக்கியத்தில் அர்க்க பதத்திற்கு வ்யாக்கியானம்செய்த தீக்ஷிதரவர்கள் பின்வாக்கியத்திலுள்ள ஸௌம்யபதத்திற்கு வ்யாக்கியானம் செய்யாமல் விட்டனர். இவ்வாறாக நமது தீக்ஷிதரவர்கள் காட்டிய ஸங்கிரகவசனமே திங்கட்கிழமையிற்றான் மகோதய புண்யகாலமென்பதற்கு மூலப்பிரமாணமான ப்ரத்தியக்ஷவசனமாய் இருக்க வேறு வசனத்தை தீக்ஷிதரவர்கள் என் பிரமாணமாய் அபேக்ஷிக்க வேண்டும். ஆனால் இந்தக்கருத்து நமது தீக்ஷிதரவர்கட்குப் புலப்படாமையாற்றான் வேறு வசனத்திலபேக்ஷை ஏற்பட்டதுபோலும். இதனாற்றான் நமது தீக்ஷி-

தாவர்கள் **சான்த்ரே வார** என்ற வசனத்தில் **சான்த்ரேவார** என்று பாடத்தையும் மாற்றிவிட்டதாகத் தெரிகிறது. இப்பொழுது நமது தீக்ஷிதாவர்களால் கற்பிக்கப்பட்ட பாடம் தவிர வேறு எந்தக் கிரந்தகிலானுலும் **சான்த்ரேவார** என்றபாடத்தை இதுவரை யாரும் கண்டதில்லை. ஆகையால் ஸங்கிரக வசனப்படிக்கும் அதற்கு வியாக்கியானம் போலுள்ள ஆக்னேய புராண வசனத்தின்படிக்கும் திங்கட்கிழமையில் அமாதிகள் சேர்ந்தால் தான் மஹோதய புண்ணியகாலம். புதன்கிழமையில் வந்தால் புண்ணிய காலமுண்டென்பதற்கு வேறு பிரமாணம் கிடைக்காவிடில் அதையனுஷ்டிக்கக் கூடாது. ஒருவாறு கிடைத்தாலும் சிஷ்டாசாரத்திலில்லாததினுல் உபேக்ஷிக்க வேண்டியது தான். இதற்குதாரணம் அப்பாதீக்ஷிதீய வசனமேயாகும். அங்கும் நமது தீக்ஷிதர்வர்கள் **சான்த்ரேவார** என்று பாடத்தை மாற்றியது போல பாத வசனத்தில் ஸௌம்யவாரேண என்ற பாடத்தை மாற்றி புதவாரேண என்று எவர் மாற்றி விட்டாரோ தெரியவில்லை. ஆகையால் திங்கள்கிழமையில் அமாதிகள் சேர்ந்தாற்முன் மஹோதய புண்ணியகாலமென்று ஸௌம்யவாரே என்ற ஸங்கிரஹவசனத்திற்காட்டிய ஸாமானுதிகாண்யத்தைப் பலமாகக் கொண்ட சிஷ்டாசாரப்பிரம்மாஸ்திரத்தாலேயே இந்த நிர்ணயம் கூறப்பட்டது.

V. S. வேங்கட்டராம சாஸ்திரீகள்,
பத்திராதிபர்.

---

## சிதம்பரம் ரா. ம. சு. வித்யாசாலையில் பரிசளிப்பு.

சிதம்பரம் ரா. ம. சு. வேதசாஸ்திர வித்யாசாலையில் 20-12-26க்குச் சரியான க்ஷய-ஸு மார்கழி-மீ 5௳ திங்கட்கிழமை மாலை 4-மணிக்கு ஸபை ஆரம்பம் செய்யப்பட்டது. ஷெ ஸபைக்கு மதராஸ் பிரஸிடென்ஸி காலேஜ் ஸம்ஸ்கிருதப்ரொபஸர் மகா-ள-ஸ்ரீ குப்புஸ்வாமிசாஸ்திரிகள் (அவர்கள்) M.A.I.E.S. F.M.U. அவர்கள் அக்கிராஸனம் அங்கீகரித்தார்கள். பின்னும் மஹாமஹோபாத்யாயர் சி. தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர், கருங்குளம் வேதாந்தவிபூஷணம் கிருஷ்ணசாஸ்திரிகள் முதலான மஹா பண்டிதர்களும் இதர பிராம்மணபிரபுக்களும் ஷெ வித்யாசாலை தர்மபிரபுக்கள் கனம் ஸர் அண்ணுமலைசெட்டியார் முதலான நகரத்தார் பிரபுக்களும் விஜயம் செய்திருந்தார்கள். முன்னதாக

ஷ வித்யாசாலை வித்யார்த்திகளால் யஜுர்வேதம், சாமவேதம், மங்களகீர்த்தனம் செய்யப்பட்டது. பிறகு ஷ வித்யாசாலை தலைமை உபாத்தியாயரான பிரம்மஸ்ரீ M. N. இராகவசாஸ்திரிகள் அக்ராஸனரை வரவேற்றல்செய்து முன் வருஷத்திய ரிபோர்ட்டை படித்தார்கள். பிறகு அக்ராஸனர் ஷ வித்யாசாலையின் பெருமையை எடுத்து அத்புதமான ஓர் உபந்நியாஸம் செய்து தத்காலநிலைமையை அனுஸரித்து நவீனமான பாடங்களை நடத்திப் பரீக்ஷைக்கு அனுப்பும்படியான பிரயத்நம் செய்யவேண்டியது ஆவச்யகம் என்பதையும் ஆவலுடன் எடுத்துரைத்தார்கள்.

பிறகு வித்தியார்த்திகளுக்கு பாரிதோஷிகமளிக்கப்பட்டது பிறகு மகாமகோபாத்யாயர், சி. தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதரவர்களும்வேதாந்த விபூஷணம் க. கிருஷ்ணசாஸ்திரிகளும் பத்துப் பத்து நிமிஷம் பாடசாலையின் பெருமையைப்பற்றி உபந்நியஸித்தார்கள். பிறகு அக்கிராஸனரின் முடிவுரை நடந்ததும், ஷ தலைமை உபாத்யாயரால் நன்றி கூறப்பட்டு, தாம்பூலம் வழங்கி ஷ ஸபை $6\frac{1}{2}$-மணிக்கு மங்களத்துடன் முடிவுபெற்றது. சித்ஸபேசருடைய கருணாகடாக்ஷத்தால் ஷ வித்யாசாலை விசேஷாபிவிருத்தியடையவேண்டுமென்று ஸகல பிராமணர்களும் ஆசீர்வதித்தார்கள்.

ஷ வித்தியாசாலை நிர்வாஹகர்

---

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்க்கவே.

---

இந்தக் காமகோடிபீடத்துக்கு வாயுமூலையில் எவ்வுலகத்தும் எச்சமயத்தும் தழைத்தோங்கி வளர்கின்ற வேதமே மாவிருக்ஷமாய்த் தளிர் பூங்கனிகளோடு நிழலைச்செய்ய அம்மூலத்தில் உருவரு வனு மலை யுண்மையின்மை மற்றிருள் ஒளியின்றி நின்றிலங்கும் அகண்டஜோதியாய் விளங்குஞ் சத்தாமாத்திரமாய் உயிர்ப்பிணையொடுக்கி விழித்துறங்கும் யோகியர் அயர்சியிலகக் கண்ணுணுக்கும்சுடரோளியர்யாய் விளங்குஞ்சின்மாத்திரமாய் ஏனையோருள்ளத்துப் பெருவிரலளவையினுள்ளத்திற் பேணிநின்றுருவியிர் முழுவதும் ஆட்டும் விளக்கொளியாய் விளங்கும் ஆனந்தமாத்திரமாய்ப் பிரகாசிக்கும் அகண்ட சச்சிதானந்தப் பிழம்பாய்த் தோன்றி பிரும்ம விஷ்ணு சுரேந்திரர்களால் ஸேவிக்கப்பட்டு "மாயுமால் விடைமேலொரு பாகனே, காயவின்மதன் பட்டது கம்பமே," என்றும், "கரவாடும் வன்னெஞ்சர்க்கரியானை, இரவாடும் பெருமானை என்மனத்தே வைத்தேனே" என்றும், ஆலந்தானுகந்த முது செய்தானை, காலகாலனைக் கம்பனெம்மானைக் காணக்கண்ணடியேன் பெற்றவறே" என்றும் சைவ சமயாசார்யர்களாகிய மூவர் முதலிகளால் ஓதப்பட்டனவாகிய பல தேவாரமாலைகளேற்றுஅவருள் திருஞானசம்பந்தசுவாமிகளுக்குத் தவங்கிடந்த திருமாலுக்குச் சிவசாரூப்யம் கொடுக்கு மாற்றலும் "மைப்படிந்த கண்ணாளுந்தானுங் கச்சிமயானத்தான் வார்சடையானென்னினல்லா, னொப்புடையனல்லனொருவனல்லனோ ரூரனல்லனோருவமனில்லி. அப்படியுமந்நிறமுமவ்வண்ண முமவனருளே கண்ணாகக்காணினல்லால், இப்படியனிந்நிறத்தனிவ்வண்ணத்தனிவனிறைவனென்றெழுதிக் காட்டோணாதே" என்றதிருநாவுக்கரசு சுவாமிகளுக்கு எழுதிக் காட்டவல்ல சிவானுபவ விளைவும் "நெய்யும்பாலுந்தயிருங்கொண்டு நித்தம் பூஜை செய்யலுற்றூற் கையிலொன்றுங் காணமில்லைக் கழலடிதொழுதுய்யினல்லால் ஐவர் கொண்டிங்காட்டவாடி யாழ்குழிப்பட்டழுந்துவேனுக்குய்யுமாறென்றருளிச் செய்யிரோணகாந்தன்றளியுளீரே" என்ற சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சிவபோக நுகர்தற் கேதுவாகியநெய் முதலிய திரவியங்களோடும் பொன்னுந்தந்தருளிய ஏகாம்பரநாதராலயம் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது. அக்கினி மூலையில்

அவ்வேகம்பவாணர் சன்னிதியை நோக்கி நிற்கும் அத்திரிகிரி நாதராகிய வரதராஜப் பெருமாளாலயம் பிரகாசிக்கின்றது.

இங்ஙனம் மூவராலும் பிரகாசிக்கின்ற அந்தக்காஞ்சி க்ஷேத்திரப் பிரபாவம் வடமொழியில் ஸ்காந்த புராணம் சனற்குமாரசம்ஹிதை காளிகாகண்டத்தில் தீர்த்தமான்மியத்தில் கூறப்பட்டுள்ள ஐம்பத்தைந்து அத்தியாயமாகிய "பஞ்சாசத்" என்கிற நூலினும் சிவபுராணம், பிரும்மாண்டபுராணம் முதலிய பல புராணங்களினின்றும் சங்கிரகித்துள்ள நூறு அத்தியாயமாகிய "சதாத்யாயம்" என்னும் நூலினும் மார்க்கண்டேய புராணம் ஸ்ரீவித்யாகண்டத்தில் சிறந்தெடுத்துச் சொல்லப்பட்டுள்ள பதினான்கு அத்தியாயமாகிய காமாக்ஷி விலாஸம் என்கிற நூலினும் சொல்லப்பட்டுள்ளது. அம்மூன்றும் மூர்த்தி, ஸ்தலம், தீர்த்தம் என்பனவற்றைக் கூறுவனவேயாயினும் பஞ்சாசத் என்கிற நூல் காஞ்சியில் வீற்றிருக்கும் சிவமூர்த்திகளுடைய ஆதிக்கிய பிரபாவங்களையும், சதாத்தியாயமென்கிற நூல்ஸ்தலம் தீர்த்தமென்கிற இவ்விரண்டின் ஆதிக்கிய பிரபாவங்களையும் காமாக்ஷி விலாசமென்கிற நூல் காமாக்ஷி தேவியினுடைய பிரபாவத்தையும் வியந்து சிறப்பாக வெடுத்துக் கூறுகின்றன. இவ்வுண்மை அந்நூல்களைக் கண்ணுறுங்கால் விளங்கும்.

வடமொழியிலுள்ள இம்மூன்று நூல்களுள் பஞ்சாசத் என்னும் நூல் திராவிடமகாபாஷ்ய கர்த்தராகிய ஸ்ரீசிவஞான யோகிகளாலும், சதாத்யாயம் என்னும் நூல் ஷை ஸ்ரீசிவஞானமுனிவரின் மாணாக்கராகிய கச்சியப்பமுனிவராலும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுக் காஞ்சிபுராணம் என வழங்கிவருகின்றது. தமிழில் வந்த அந்தக்காஞ்சி புராணத்தை யச்சிடவந்தவர்கள் நூலாசிரியராகிய இருவரும் வடமொழியாகிய முதநூல்களைக் கொண்டியற்றினார்களென்பதை யறிவதற்கிடனில்லாமற் போனமையாலும், இருவரும் ஆசிரியர் மாணாக்கராயிருந்தமையாலும். இருவரும் காஞ்சிமான்மியத்தையே சொன்னமையாலும். முதற்காண்டம் இரண்டாங்காண்டமெனப் பெயரிட்டு வெளியாக்கினர். அதனுண்மையை நோக்குங்கால் இரண்டும் தனித்தனிப் புராணங்களென்றே வெளியாகின்றன., ஆகவே, ஒருநூற் சம்பந்தத்தைக் காட்டும் திருவிளையாடற்புராணகாண்டங்களைப்போல இக்காண்டங்களாகா

சிதம்பர க்ஷேத்திரத்திற்குக் கோயிற்புராணம், சிதம்பரபுராணம் எனவும், மதுரை க்ஷேத்திரத்திற்குத் திருவிளையாடற் புராணம், கடம்பவனப்புராணம் எனவும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் ஒன்றற்கே ஒன்று இரண்டு பலவாகப் பல புராணங்களிருப்பதுபோலும் காஞ்சிக்ஷேத்திரத்திற்கும் முதற்காண்டம் இரண்டாங்காண்டமெனக் குறிக்கப்பட்டிருப்பதை இரண்டு புராணங்களாகக் கொள்வதே முறைமையா மென்றுணரக் கிடக்கின்றன.

நிற்க, காஞ்சிப்பிரபாவத்தை விளக்கிய மூன்று நூல்களுள் காமாக்ஷிதேவியினுடைய பிரபாவத்தை விளக்கவந்த காமாக்ஷி விலாஸம் என்கிற நூல் இதுவரையில் வெளிப்படாமலிருந்தமையால் அந்நூலே உரையளவை யான் விளங்கத்தக்க வனைய இரண்டு நூல்களைப்போலல்லாமல் யாவர்க்கும் மிக வெளிமையாய் விளங்கத்தக்க வசனநடையில் வெளியாக்குவதே மிகவும் நன்மையாமென்று எமக்கு வேண்டிய பலர் அபிப்பிராயப்பட்டமையான் அவ்வண்ணமே வெளியிடலாயிற்று.

வடமொழியிலும் தென்மொழியிலும் உள்ள காஞ்சிப் புராணங்களில் காஞ்சியிலுள்ள சிவமூர்த்திகள் இவரிவரென்பதும் தீர்த்தங்களிவையிவை யென்பதும் இவ்விவ்விடங்களிலிருக்கின்றனவென்பதும்பூஜித்தோர்இவரிவர்என்பது ஒன்றுசேரக்கண்டுதெளிதல் அருமையாக விருக்கின்றமையானும் க்ஷேத்திரதரிசனத்தை விரும்பி வருவோர் புராணங்களைப்பார்ப்பதும் முன்கூறிய மூர்த்திஸ்தலம், தீர்த்தங்களிருக்குமிடங்களைக் காணப்பெறுவதும், ஆங்காங்கு செல்லும் மார்க்கங்களை பறிந்து கொள்வதும், அருமையினும் அருமையாய்த் தரிசனம்செய்வதையிழந்து போகின்றமையானும் அந்தக்கஷ்டங்களெல்லாம் அன்பர்கட்கு நிவிர்த்தி செய்வித்தல் பெரியசிவபுண்ணியமெனக் கருதி இந்தக் காஞ்சிமஹிமை வெளியிடலாயிற்று.

---